# Karumadhi Prayers or Sapindikaranam (Prayers marking the end of the mourning period - 16th day Prayers)

'Karumadhi' meaning 'Ending of the Karyams ' is performed on the 16th day after the cremation. 'Karma' means 'Rites' and 'Adhi' means 'the one that comes to an end'. The prayers start on the 15th day night and end on the 16th day morning. Some communities perform the prayers marking the end of the mourning period on the 13th day known as "Sapindikaranam".

"Sapindi" for the deceased is performed with the goal of ritualistically merging his soul or spirit with those of the immediate three paternal forefathers - father, grandfather and great grandfather. If any of the three are alive at the time, Sapindi is postponed until after the death of all three. In the case of a married woman, the three will be her husband, his father and grandfather

The procedures below are followed marking the end of the mourning period on the 16th day.

## Karumadhi Prayers at Home

1. According to the family tradition, 'Padayal' (3 or 5 in number) or offering of food items will be prepared.
2. The Kartha wearing the same dhoti used for cremation and ashes collection, goes to the sea shore. He is accompanied by all his close male relatives, who bathed the body of the deceased before the funeral.
3. After the Kartha and his relatives leave, the house is cleaned and all ladies bathe.
4. The Kartha after reaching the seashore wears the Pavithram and Poonool and performs the Kalasa pooja.
5. Prayers are performed for Yaman (God of Death) and Chitragupta (Yaman's accountant). 'Yeaka Homam' is performed in glory of Yama.
6. Three 'Pindams' (cooked rice balls) are offered to the immediate 3 forefathers known as 'Pinda Prathaanam'.
7. Dhoopam, Dheepam, Aarthi are performed to the 'Pindam' and flowers are offered after going around the Pindam 3 times in anti-clockwise direction.
8. Tarpanam( offering water with Thila seeds or Ellu) is performed.
9. The 3 Pindams are lumped together with the 'Padayal" in a white cloth and the Kartha carries it on his left shoulder.
10. The Kartha goes towards the sea and throws the 'Padayal' packing in the sea reciting ' Om Namasivaya' 3 times.
11. The Kartha then moves one step forward, takes a dip in the sea and throws away his Pavithram and Poonool.
12. The Kartha after reaching the shore is supposed to tonsure the head. Alternatively, a strand of hair is removed 3 times by reciting "Vapana Manthram" (Manthras prescribed for tonsuring).

# வீட்டில் கருமாதி சடங்கு (இறப்பிற்கு பின்)
# (15ஆம் நாள் இரவு -16ஆம் நாள் காலை)

1. அவரவர்கள் குடும்பத்தின் பழக்கத்தையொட்டி வீட்டில் 15ஆம் நாள் இரவு (இறப்பிற்கு பின்) 3 அல்லது 5 படையல் ஏற்பாடு செய்வார்கள்.

2. மகன் (கர்த்தா) மற்றும் இறந்தவரின் உடலைக் குளிப்பாட்டிய சொந்தக்காரர்கள் வீட்டில் ஒன்று கூடுவார்கள். 'கர்த்தா' அதே வேஷ்டி, துண்டை (முதல் நாள் இறுதிசடங்கு தொடங்கி அணிந்தது) அணிந்து 'படையலை' எடுத்துக்கொண்டு கடற்கரைக்குச் செல்வார்கள்.

3. கருமாதி பிரார்த்தனை (காரியத்தின் முடிவு)
'கர்மா' என்றால் 'காரியம' என்றும் 'ஆதி' என்றால் 'காரியத்தின் முடிவு' என்றும் பொருள்படும். 'படையல்' என்பது இறந்தவருக்குப் பிடித்த உணவுப் பதார்த்தங்களைச் சமைப்பது.

4. 'கர்த்தா' பூனூலையும், பவித்திரத்தையும் அணிந்து கொண்டு கலசபூஜையுடன் கருமாதியைத் தொடங்குவார்.

5. எமனுக்கும், சித்ரகுப்தனுக்கும் 'யேகா ஹோமம்' (Yeaka Homam) செய்வார். இறந்தவருக்கு துணைபுரிந்து நல்லவழிகாட்ட எமனிடம் அருள் புரியக் கேட்பார். 'வசு' என்னும் பிதுர்க்களைக் காக்கும் தேவர்களையும் 'ருத்ரன்' என்னும் பிதுர்க்களைக் காக்கும் 'ஆதித்தன்' என்னும் பிதுர்க்களுக்கு நல்வழி காட்டும் தேவர்களையும் ஹோமத்தில் எழுந்தருளச் செய்வார்.

## பிண்ட பிரதானம்

மூன்று பிண்டங்கள் (கொள்ளுதாத்தா, தாத்தா, அப்பா) வைக்கப்படும். தாயார் இறந்தாலும் (தாய் வழி கொள்ளுதாத்தா, தாத்தா, மற்றும் இறந்த தந்தையாருக்கு) 3 பிண்டங்கள் உண்டு. இறந்தவரைக் காட்டும்படி 'பெரிய பிண்டம்' ஒன்று செய்யப்படும். அதை 3 பிண்டங்களுடன் சேர்ப்பார்கள்.

**தர்ப்பணம்**

பின் தர்ப்பணம் செய்து, பிண்டங்களுக்கு பூஜை செய்வார்கள். தூபம், தீபம், ஆர்த்தி ஆகியவைக் காட்டி பிண்டங்களை வலமிருந்து இடமாக சுற்றி வந்து படையலுடன் சேர்த்து மூட்டையில் கட்டுவார்கள்.

**கடற்கரையில் கருமாதி சடங்கு**

படையல் மூட்டையை இடது தோளில் சுமந்து கொண்டு உறவினர்களுடன் படகில் கடலுக்குள் செல்வார்கள்.
பின்னர் 'நமசிவாயா' என்று 3 முறை சொல்லி படையல் மூட்டையை கடலுக்குள் வீசி திரும்பிப் பார்க்காமல் கடற்கரைக்குத் திரும்புவார்கள்.

**பவித்ரம், பூனூல், துணிமணிகளை வீசுதல்**

கடற்கரையை அடைந்தவுடன், கடலுக்குள் ஒரு முறை மூழ்கி பவித்ரம், பூனூலை வீசுவார்கள். இதுவரைப் பயன்படுத்திய வேஷ்டி, துண்டையும் வீசுவார்கள்.

**முடியிறக்குதல் (வாபன மந்திரம் கூறுதல்)**

கடற்கரைக்கு வந்து சேர்ந்தவுடன் தலையை விருப்பப்பட்டால் முடி இறக்கிக் கொள்ளலாம். அல்லது மூன்று தலைமயிர்களை பிடுங்கி எடுத்த பிறகு 'வாபன மந்திரம்' முறைப்படி சொல்வார்கள். பின்னர் வீடு திரும்புவார்கள்.

# Subasweekaram ( 16th day prayers at home )

The "Kartha", after performing the ceremonies on the seaside ('Anthiyeshti' or Karumathi prayers) must pray to the Almighty that all the rituals benefit the soul and then start reciting the holy names of God till he reaches home.
At home, the water will be kept in a pail and the "Ulakkai" ( Ulukalam or Pestle) will be lying on the floor at the entrance. The "Kartha" will wash his legs and walk over the "Ulakkai"
Two ladies in the house must perform the 'Aarthi' for the "Kartha" before he enters the house.
The "Kartha" will enter the Pooja room and light up the lamp. Mangala Slokam will be recited and deepam, dhoopam and aarthi will be offered.

## Subasweekaram and Suba Punyathanam

The priest will then start the "Subasweekaram" or Veedu Kiruththiyam" with Kalasa Poojai.
"Punyathanam" or Punyahavachanam*, the purification ritual will be performed and the water will be sprinkled all over the house. The water will be also given to the close relatives to purify their homes. There will be also some water left in the Kartha's house which will be used by him to bathe the next day, i.e on the 17th day.

The coconut kept in the Kalasam will be taken by the "Kartha", when he goes to the Temple to perform the Athmashanthi Pooja to the deceased.

## *Suba Punyathanam or Punyahavachanam

*Suba Punyathanam or Punyahavachanam is a Vedic ritual performed for the purification of the house after the birth of a child, during Grahaprevesam and after completing the death rituals (13th or 16th day) and prior to the annual 'Thithi' or 'Sirartham' of the deceased.

A 'Kalasam' (pot) is filled with water and God Varuna (God of ocean, rivers and water) is invoked in the brass pot by chanting " Pavamana Suktham" (Veda Manthras)

The pot symbolizes Mother Earth, Water is the life-giver as it symbolizes the primordial water from which the creation emerged, The green leaves stand for fertility and life and coconut is the "Shriphala", stands for the head of the Supreme representing the divine consciousness. Thus, the 'Kalasam' is the divine essence and gives life to all.

The water springled from the 'Kalasam' all over the house and on the family members is supposed to cleanse the place and and purify the soul

# ஆத்மசாந்தி நீத்தார் சடங்கு (16ஆம் நாள் சடங்குகள்)

## சுபஸ்வீகாரம் (வீட்டில் செய்யப்படும் 16வது நாள் பிரார்த்தனைகள்)

'கருமாதி' அல்லது "அந்தியேஷ்டி" (அந்திமகிரியை) என்னும் இறுதிகட்ட 16ஆம் நாள் பிரார்த்தனைகளை கடற்கரையில் செய்த பின் கர்த்தா வீடு திரும்புவார். வழிமுழுவதும் இறைவனின் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டே வருவது அவசியம்.

வீட்டின் வெளியே வாளியில் தண்ணீர் வைத்து உலக்கையை போட்டு வைத்திருப்பார்கள். கால்களைக் கழுவி விட்டு உலக்கையைத் தாண்டி உள்ளே வர வேண்டும்.

வீட்டிலுள்ள இரண்டு பெண்கள் கர்த்தாவிற்கு ஆர்த்தி எடுக்க வேண்டும். பின் அவர் வீட்டிற்குள் நுழைவார்.

பிறகு பூஜையறைக்குச் சென்று இறைவனுக்குத் தன் கையால் விளக்கேற்றுவார். மங்கள ஸ்லோகங்கள் சொல்லி தீபம், தூபம், கற்பூர ஆரத்தி காட்டுவார்.

## சுபஸ்வீகாரம்

பிறகு வீட்டில் சுபம் சேர்க்க "சுபஸ்வீகாரம்" மற்றும் "வீடு கிருத்தியம்" என்னும் பிரார்த்தனைகளை வேதியர் தொடங்குவார். இறந்தவருக்காக 16 நாட்கள் துக்கம் கடைபிடித்து பிறகு மனதை ஆற்றிக் கொண்ட பின் வீட்டில் சுபம் சேர்ப்பது அவசியம்.

## புண்யாதானம்

முதலில் 'கலசபூஜை' செய்து பின் 'புண்யாதானம்' என்னும் வேதநெறிமுறையில் காணப்படும் சுத்திகரிக்கும் மந்திரங்களைச் சொல்வார்கள். கலசத்தில் இருந்து நீரை தர்ப்பையால் எடுத்து வீடு முழுவதும் தெளித்து தூய்மைபடுத்துவார்கள். கலசத்தில் சிறிது தண்ணீர் மீதம் வைக்கப்படும். அதை அடுத்த நாள் (17வது நாள்) காலை கர்த்தா குளிக்கும்போது பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நெருங்கிய உறவினர்களுக்கும் புண்ணியாதான நீரைக் கொடுத்து வீடுகள் சுத்திகரிக்கப்படும். கலசத்தில் வைக்கப்பட்ட தேங்காய் பின் கர்த்தாவால் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆத்மசாந்தி பிராத்த்தனைக்குப் பிறகு தரையில் போட்டு 'சதுர்காயாக' உடைக்கப்படும். அங்கு கர்த்தா தன்னைத் தானே தேங்காயால் 3 தடவை வலமிருந்து இடமாகச் சுற்றி திருஷ்டி கழிப்பார்கள்.